நூதன இன்பரெவ்

கலிகாலப் பாட்டு

அத்துடன்

எமன் மார்க்கண்டன் தர்க்கமும்,

ரெயில்வே திருடன் பாட்டும்,

பஜனை கீர்த்தனமும்,

அடங்கியிருக்கிறது.

பாளையங்கோட்டை புஸ்தகவியாபாரம்,

சோ. சிவசுப்பிரமணியபிள்ளையவர்கள் விருப்பத்தின்படி

திருநெல்வேலிப்பாலம் புஸ்தகவியாபாரம் ப்ரும்மஸ்ரீ

P. V. சாம்பசிவ அய்யர்

அவர்களால்.

திருநெல்வேலிப்பாலம்

ஸ்ரீ காந்திமதி விலாஸம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1924 [அணா $1\frac{1}{2}$

...பஜா புஸ்தகவியாபாரம்

சோ. சிவசுப்பிரமணிய பிள்ளை

அவர்களால் இயற்றியது.

காப்பு வெண்பா

கலிகாலக் கோலமதை கவியாக யான்பாட
நலியாமல் நாமகனே—வலியுடனே
மணமகனும் கந்தன்—மாலயனோடே அரனும்
கணபதியும் என்னாளும் காப்பு

(1) காலம்கலிகாலமாச்சுதே கண்ணே சுந்தரம்-
காப்பி ஹோட்டல் அதிகமாச்சுதே
உலகமெங்கும் பெருகியதே உஸ்க்கி சாருயக்கடை
கலகமதிற்குக் கிசைந்த கஞ்சா அபின் கள்ளுக்கடை
காலமுமே கெட்டுப்போச்சுதே கண்ணே சுந்தரம்-
கச்சேரிவழக்கு அதிகமாச்சுதே

(2) சாதிமுறை கெட்டுப் போச்சுதே ஜோக்கு சுந்தரம்-
தலைகளெல்லாம் கிறுப்பு ஆச்சுதே
ஆதியில் வைக்கும் தலை- அடியோடு மதி மாந்து
பாதியில் நறுக்கு வீசை- பய்யப் பய்யப் பரவிவந்து
யேதிப்படி செய்யலாச்சுதோ- இளையசுந்தரம்-
என்ன கலிகால மாச்சுதோ

(3) பலகாறக் கடைக்குப் பஞ்சமா- பால சுந்தரம்-
பாக்கு வெற்றிலை கடைக்குப் பஞ்சமா
அலகிலே புகையிலையை- அவசியம் ஒதுக்கணுமாம்
சில சில வாசனையை- சேர்த்து யிருக்கணுமாம்
பலமாய் விலைகள் ஆகி வருகுதே- புகையிலையது-
பணம் பணமாய் பிடுங்கி கொடுக்குதே

(4) நாடகங்கள் நிலைத்துப் போச்சுதே- நளின சுந்தரம்
நல்லடிக்கட்டு வசூலு மாச்சுதே
ஆடல்பாடல் மிகுந்து- அபினயமும் மிகச் சிறந்து
சபாஸ்பட்டம் அதிகரித்தது
...வேடிக்கைகள் துயில் மாந்து
...ாடகப்பேய் பிடித்துக் கொண்டதே- நம்சிறுவருக்கு
நல்ல மனதை கெடுக்க வந்ததே

(5) பட்டிக்காடெல்லாம் காப்பி யாச்சுதே
...லம்மா பாலு பழைய சோத்தை மாக்கலாச்சுதே

படடில தம்பூரு போ...
ஹாாமோனிய மாச்சு
படடியெல்லாம் டிருமா வாச்சு-
பாட்டு காறர் பெருத்துப் போச்சு
போட்டோ படம் பெருத்துப் போச்சுதே
யாலமமா பாலு பெண்களின் படம் அதிகமாச்சுதே

(6) தங்க நகை தினுசுமாகுதே- தளுக்கு சுந்தரம்-
தாலியும் புது மாதிரி யாகுதே
வங்கி யென்ற நகையுமாறி-
வாங்கடா வென்று பெயரு மாச்சு
மிஞ்சி யென்ற நகையுமாறி-
மெட்டி யென்ற பெயரு மாச்சு
தங்கமது மாத்துப் போச்சுதே- தளுக்கு சுந்த...
தட்டார் செய்கிற வேலை யாச்சுதே

(7) இங்கிலீஷ் படிப்பு அதிகமாச்சுது- இளைய சுந்தரம்-
எந்தத் தொழிலும் கெட்டுப் போச்சுது
சங்கை அன்றி பி. எ. பட்டம்-
சர்க்கார் வேலைக்குமே திண்டாட்டம்
மங்கையர்கள் பி. எ. பட்டம்-
மலிந்தது வெகு கொண்டாட்டம்
திங்கும் பண்டம் தங்கமாச்சுதே- தளுக்கு சுந்தரம்-
சாகுபடியும் குறைந்து போச்சுதே

(8) விவசாயம் மறக்க லாச்சுதே- வடிவேலய்யா-
வெட்கமிகத் தோணிப் போச்சுதே
உபகார நிலங்களைத்தான்-
விருதாவில் தருசுபோட்டு
விபகார இங்கிலீஷின் வித்தைகற்ற மமதை யிட்டு
உப்பில்லாக்கூள் குடிக்கலாச்சுதே-உத்தமி சுந்தரம்-
உடுப்பு மட்டும் தளுக்கு காட்டுதே

(9) பீடிக்குடி அதிக மாச்சுது, பெரிய சுந்தரம்-
பெருத்த மோசம் சிறுவற் காச்சுது
பொட்டுச் சேட்டு மண்டை சேட்டு
பெரிய சேட்டு சின்னச் சேட்டு
சுட்டிக் காட்டும் சொக்கலால் சேட்டு,
ஷோக்கென்று தான் நெஞ்சை சுட்டு
பீடிப்பேய் பிடித்துக் கொண்டதே-
பெரிய சுந்தரம பீடிக்கம்பெனி
பெருத்துக் கொண்டதே

...டை பெருத்துப் போச்சு...

...துக்கு உபகாரம்போல் நஷ்டமாச்சுதே

...ாடிக்கடை முதலாளிக்கு-

மாசத்தவணை ஆயிரம் ரூபாய்

வண்டிப் பேட்டை முதலாளிக்கு

வாரத்தவணை ஆயிரம் ரூபாய்

ரெண்டு வட்டி போடலாச்சுதே ராஜாமணி-

ரிக்கார்டு பலமாய் வாங்கலாச்சுதே

1) அரிசி விலை குறைந்து போச்சுதே.

அம்மா பெண்ணே- அகவிலைமிக அதிகமாச்சுதே

அரியாத பாலரெல்லாம்: அவுசாரி வசத்தில் பட்டு

சரியான திரேகமெல்லாம்

சிரங்குடனே புண்ணும் பட்டு

பரிகாசம் தேடலாச்சுதே. பாப்பு சுந்தரம்-

பாழும் பணத்தை அழிக்கலாச்சுதே

(12) கண்ட இடமெல்லாம் டிராமா ஆச்சுதே வடிவேலப்பா-

பெண்டுகள் நாடகம் பெருத்துப் போச்சுதே

நீதியில்லா மாதர்களுக்கு

நெடுங்கை ரவிக்கை ஆச்சு

வீதிதனில் லேடீஸ் பஞ்சமா பிரிட்டிஷ் பாலமா

வெற்றிலை பாக்கு கடைக்கி பஞ்சமா

உ

திருநெல்வேலிப்பாலம்

மக-ள-ள- வித்வான்

P. V. சாமிநாத பாகவதர்

அவர்களால் இயற்றியது

மார்க்கண்டவனுக்கும் எமனுக்கும் தர்க்கம்.

இகயாலநீ வானிதோ என்ற மெட்டு.

மார்க்கண்டன் சொல்லுகிறது.

பல்லவி.

ஓட்டா ஓடடா எமபுரம் தன்னை நோக்கி (ஓடடா)

அநுபல்லவி.

நாடி என்னைப் பிடிக்க வந்தாய்

நாரணன் மைத்துனன் கைவிடமாட்டார். (ஓடடா)

ஈசன் கோபம் பொல்லாதடா

உன் பாசம் என்னை வெல்லாதடா

யோசனை இல்லாதவனே
மாசில்லா ஈசன கோபம் கொள்ளுறான் (ஒட்டா

எமதருமராஜன் சொல்லுகிறது

அலங்காரம். அலங்காரம். என்ற மெட்டு.

(1) விட மாட்டேன் விட மட்டேன்
விட்டு விட்டுப் போக மாட்டேன்
கட்டிப் பிடித்து உன்னை
கழுகு மரத்தி லேத்தி
முட்டங் காலைப் போத்து
மூலையிலே தள்ளு வேண்டா
என்னை அரியாயோ
என் பெலம் தெரியாதோ
சின்னப் பயலே கூட வாடா
சீர் குலைந்து போகா தடா (விட்மாட்டேன்)

மார்க்கண்டன சொல்லுகிறது

(2) பலியாது பலியாது நீ கொண்ட
பாச்சா அது பலியாது பலியாது
கட்டிப் பிடிப்பே னென்று
கடினமாய் பேசுகிறாய்
மூட்டாளே நீ போடா முருகனை
ஈன்றோன் துணையும் உண்டு (அது பலியாது)

றெயில்வே திருடன் பாட்டு நொண்டி சிந்து

உத்தம சாமி மார்களா உங்கள் கோட் காப் ஷர்ட்டு
பில்ட்டு வாச்டிஒளஸேஷ்ஸ் மணி எல்லாம கவனமாய்பார்த்
துக் கொள்ளுங்கள் தூங்காமல்கெவனியுங்கள் ஆங்காரத்திலே
சிறந்த அதிக பிரஸங்கி ஜெகஜால புரட்டனே நான் நீங்கள்
எத்தனை பேர் இருந்தாலும் அத்தனை பேரையும்ஏமாத்திநடந்
திடுவேன் ஓடிப்பறந்திடுவேன் ஜெல்தி நடந்திடுவேன் (உத்தம
சாமி) மாயப் பொடி கையிலுண்டு இட்டு மதியை மயக்கச்
செய்துநடந்திடுவேன்ஓடிப்பறந்திடுவேன்(உத்தமசமிமார்களா)

விருத்தம்

கொண்டவனை மதியாமல் பேசும்பெண்டீர்
குடிக்கி நமன் அவளைவிட வேறே இல்லை பெண்டி
ரெண்டு கொண்டாலும் பலனே இல்லை பெருந்தணலில்
இரங்குவது நலம்தான் அப்பா

அன்னிய மாதரை விலக்கல்

வன ஜாக்ஷி என்ற மெட்டு

பல்லவி

நினையாதே மையல் தரும் மாதர்களை (நினையாதே)

அனுபல்லவி

அந்த வேஸைபர்கள் செய்யுஞ் சூதுவாதுகளைநினையாதே

சரணம்

(1) இடையில் அணிவது இமிடேஷன் சேலை
இருகாதில் ஜொலிப்பது வெள்ளைக்கல் ஓலை
நடையினில் நின்று மயக்குவள் மாலை
நளினமர்துநகைப்பின் சூதுநம்பில் தீதுநமக்கர்காது (நினை)

(2) வருமையப்ல் பெருந்துயர் அளித்திடும் மோகம்.
மாதரை நம்பினல் இல்லை விவேகம்
மனதைக்கெடுத்துக் கொடுப்பரே சோகம்
மதியைப்போக்கும் விதியை தூக்கும் நிதியை நீக்கும்
சதிக்குள்ளாக்கும் (நினையாதே)

(3) தெருவினில் தியங்கி நாம் விழித்திட விடுவார்
திரவியமனைத்தையும் பறிக்கவேதொடுவார்
திருநெல்லை ஆனந்தம் சொல்கேட்டிடுவார்
திசைகளெங்கும் இசைகள் பாடும் தில்லைநாதன்
பதமே சேர்வீர். (நினையாதே)

விவாகத்தால்ஏற்படும்துன்பம்.

கலியாணம் செய்துவையுமே என்ற வர்னமெட்டு.

பல்லவி.

கலியாணம் செய்தல் துன்பமே
நம்கனப பெருமையை போக்கும். (கலி)

அனுபல்லவி.

(1) கொண்டமனைவி மக்களுக்கென்ன விசாரம்
கொடுப்பவனிருந்தால் நிம்பதேசாரம்
பெண்டுடன் வாழ்வதும் பெரியபூபாரம்
பெரும் துயரிடுவதும் அவருபகாரம் (கலி)

(2) அனுதினம் சுகத்தை நாடி நாம் செல்வோம்
அவர்களுடன் சேர்ந்து பலத்தையும் விடுவோம்
அல்லினும் பகலினும வீணாக்கழிப்போம்
அவன் பதமலா ஒருக்காலுமே சேரோம்

(3) திரவியமுழுவதும் அவராலே அழியும்
திரேக பலமெம்லாம நம்மைவிட்டு கழியும்
தினமிதை படித்தினியாவது தெளியும்
திருநெல்லை சிவானந்தம் நூற்பயனறியும்

ஆண்டிப்பண்டார

(1) கவலைதீர்த்திடுவாய் எந்தன்
பாரிலுள்ளோர்களென்னை பாவி
என்று சொல்லாமலே ஓடியே
வந்தெனக்கு உகந்துவர மளித்திடுவாய். (கவலை)
தாயும் தந்தையும் நீயே
இனமான தனமும் நீயே
ஓயாதகவலையினுல்
உள்ளம் கலங்குதையோ (கவலை)

(2) கடற்கறை ஆண்டி என்னைக்காற்பாய் நான்ஒண்டி
ஈயாதலோபியுடன் நான்அலைந்து வாடாமல்
ஓயாமல் உனதருளை உகந்தெனக்குதந்திடுவாய். (கடற்)
உள்ளம்கபடானுலும் உனதடிமையானதினுல்
கள்ளம்கபடு நீக்கிகார்த்திடுவாய் உன்னடிமை (கடற்)
ஊக்கமில்லா ஜெனனமென்ற
உண்மையது நீயறிந்தும்
ஏக்கமதை நீக்கிடுவாய் என்குருவே ஷண்முகனே (கடற்)

(3) வேலுப்பண்டாறம் படிபாலுக்கொண்டாறேன் (வடி)
என்குருவே வேலாயுதனே
என்வருமை தீர்ப்பவனே
ஏற்ப திகழ்ச்சிஎன்ற ஏழமையை மாற்றிடுவாய். (வேலு)
கந்தனென்று பேறும் வைத்து
கடற்கரையில் கோவில் கட்டி
அலைகடலில் பள்ளிகொண்ட
அசசுதனர் மருமகனே. (வேலு)

கவிடைமானகர் மகா-ா-ா-ஸ்ரீ K. S. கிருஷ்ண சுவாமி
பாகவதர் அவர்களால் இயற்றியது.
வனஜாக்ஷி என்ற வர்னமெட்டு.

பல்லவி

வந்தாள்வாய் வாமனன் மருகா நீ (வ)

அனுபல்லவி.

அந்த ரெங்கத்துடன் ஆலயம் வந்து
சுந்தரமாகவே பாடினேன் சிந்
கந்தசாமி நீ கருணை புரிந்து
கவலை தீருய் கடைக்கண் பாரு
அருள் புரிவாய் அன்பன் நேருய். (வ)

சரணம்.

(1) தஞ்சமென்றோருக்கு சஞ்சலம் தீர்த்திடும்
வஞ்சகம் இல்லாமல் வைத்தென்னை கார்த்திடும்
குஞ்சரிலோலா கொடுமையை மாற்றிடும்
கோலவள்ளி ஈசா முருகேசா பலநாசா ஈசா (வ)

நிம் நானே

ல் வந்தேனே

உன்பாத ஸேவைசெய்யும் பாலனும் தானே

பகரும்வாமி பணிந்தேன் நேமி

கல்லிடைபூமி கிருஷ்ண சுவாமி முன் (வ)

கீர்த்தனை.

வேலவா உந்தனை நம்பினேன் இங்கு என்ற மெட்டு.

(1) வேலவா என்னுடன் ஜாலம் செய்தால்
இதுவிணை போல்லவா ஞாலமதில்
உந்தன் கோத்திர நடத்தை நானெடுத்து
அதைச் சொல்லவா (வேலவா)

(2) பிள்ளை இரண்டும் இருந்தும் உந்தன்
தந்தை பிச்சை எடுக்கலாமா
கள்ளத்தனமாக வள்ளியைத்தேடி
நீர் கானகம் தனிலே செல்லலாமா (வேலவா)

(3) தந்தைசொல் மிக்க மந்திர மில்லையே
தாரணி சொல்வது பொய்யா
தந்தைக்கு மந்திரம் சொல்வதாலாமுயிற்
ஆகுமோ இது சொல்லய்யா. (வேலவா)

(4) ஒட்டர்வேடம் பூண்டு பிட்டை
வாங்கி உண்டு உன்தந்தை ஒளியலாமா
நிஷ்டையிலிருக்கும் கிருஷ்ண சுவாமி சொன்னேன்
தட்டினீர் அங்கு செல்லலாமா. (வேலவா)

முத்துக் குமாரய்யனே என்றமெட்டு.

இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி

பல்லவி.

இன்னும் தாமஸம் யாதம்மா ஏழை
என்மேல் வாதம்மா (இன்னும்)

அனுபல்லவி,

முன்னநாளில் முதல் என்னை ஆண்டருளும்
அன்னையாகி வந்தாய் புன்னைகவனம்
அமர்ந்தாய் என்தாய் (இன்னும்)

சரணம்.

(1) கோதில்லாதபரம்ஜோதி யானறிவு
நாதன்மேவும் பாரிமறை ஓதிவாழ்
ஒய்யாரி குமாரி (இன்னும்)

(2) புவனமீன்ற கோமதியை நாயகியை
போற்றுவார்கள் கோடிதொழு
தேற்றினேனேனாடிதேடி (இன்னும்)

(3) பாதகம்பும் கிருஷ்ணசாமி செந்தமிழில்
காதலாஞ்சாணி தமிழ் ஓதிவைக்கும் வாணிகல்யாணி (இன்)

...பரம்.

[illegible]	0	1	6
[illegible]	0	1	0
ஸமரெஸ கீர்த்தனை	0	1	0
விவேக விளக்க கீர்த்தனை	0	0	6
ஸத்பஜனை கீர்த்தனை	0	3	0
தலைவிதிக் கீர்த்தனை	0	0	6
இந்துஸ்த்தான் பஜனை கீர்த்தனை	0	2	0
நூதன இன்பரெஸகலிகர்லப்பர்ட்டு	0	1	6
கள்ளன்பர்ட்டு	0	2	0
தடிக்கழுதைப்பர்ட்டு	0	0	6
நலுங்குப்பர்ட்டு	0	2	0
த[illegible]ம்பிரபர்ணி வெள்ளப்பாட்டு	0	1	0
ஸ்ரீ ராமர்தர்லாட்டு	0	0	6
ஆண்பெண் தர்லர்ட்டு	0	1	0
மாரியம்மன் தர்லாட்டு	0	2	0
ஸ்ரீ பரமேசுவர அக்ஷரமர்லை	0	0	9
சிவசெந்திமாலை	0	1	0
கதிர்கர்மமர்லை	0	1	0
சங்கரசதாசிவமர்லை	0	2	0
கர்லக்கியர்னம்	0	2	[illegible]
ஜீவரெத்தினம்	0	1	0
காந்தி தியானம்	0	2	0
நடராஜப்பத்து	0	1	0
கெருடப்பத்து	0	0	6
அழுகணி சித்தர்பர்டல்	0	0	6
பட்டணத்தார் பர்டல்	0	2	0
ஸ்ரீ விநாயகர் அகவல்	0	1	0
பழனி ஆண்டவர் ஆனந்தக்களிப்பு	0	1	0

ஷை புஸ்த்தகங்களும் அனேகமர்திரி றெவிவர்மா படங்களும் என்னிடம் விற்ப்பனைக்கி தயாராயிருக்கிறது.

எமது விலாஸம்.

P. V. Sambasiva Iyer Avl,
Book Seller, Tinnevelly Bridge.